7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2012 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பள்ளிப் பேருந்துகளுக்கான ஒழுங்குமுறையும், கட்டுப்பாடும்) சிறப்பு விதிகள் உருவாக்கி உறுதி செய்யப்பட்டது குறித்து உள்(போ.வ.7) துறையின் 30–9–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 727–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

41. சென்னையில் உள்ள ஸ்ரீ சாரதா மடத்திற்கு, யாதொரு வணிகரால் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 14–5–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 63–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

42. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 2–7–2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 91–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

43. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2013 மார்ச் 25]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

45. 2013–2014 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை (58 புத்தகங்கள்).

46. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

47. 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

48. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு – பகுதி–1.

49. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு – பகுதி–2.

50. 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

51. 2013–2014 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்–வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2013–2014 ஆம் ஆண்டு விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).

52. 2013–2014 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி–2 திட்டங்கள்).

53. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

54. 2013–2014 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட விளக்க நூல்.

55. 2013–2014 ஆம் ஆண்டு செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

56. 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

———————